**ஏப்ரல் – 07**

# TNPSC துளிகள்


- சென்னை மற்றும் கோயம்புத்தூரில் செல்லப்பிராணிகளுக்காக என்று பூங்காக்களை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- அரசு மருத்துவக் கல்லூரிகளில் இளங்கலை மருத்துவப் படிப்புகளுக்கான தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) அடிப்படையிலான சேர்க்கை ஆணையிலிருந்து விலக்கு அளிக்கக் கோரும் தமிழக அரசின் ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமல் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அதனை நிறுத்தி வைத்துள்ளார்.
- சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்கள் ஒரு சேரச் சேர்ந்து சுமார் 2,200 கோடி ரூபாய்க்கும் அதிகமானச் செயல்பாட்டு வருவாயைப் பதிவு செய்துள்ளன மற்றும் 100 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) சரக்குக் கையாளும் திறனையும் கடந்துள்ளன.
- அங்கீகரிக்கப்பட்ட 35 இடங்களில், அசாமின் ஜோகிகோபா, சென்னை, பெங்களூரு, நாக்பூர் மற்றும் இந்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் 5 பல்முனைத் தளவாடங்கள் பூங்காக்கள் 2025-26 ஆம் நிதியாண்டு மற்றும் 2026-27 ஆம் நிதியாண்டில் செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சங்கீத நாடக அகாடமியின் ஓர் அலகான கதக் கேந்திரா 37வது கதக் மஹோத்சவ் (2025) நிகழ்ச்சியினை புது டெல்லியில் நடத்தியது.
- கேரளாவின் கண்ணாடிப்பாய் என்ற ஒரு பழங்குடியினக் கைவினைப் பொருளுக்குப் புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது.
- தாய்லாந்து நாடானது, "BIMSTEC: Prosperous, Resilient and Open" என்ற கருத்துருவின் கீழ் ஆறாவது BIMSTEC உச்சி மாநாட்டை நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதியன்று மக்களவையில் ஒட்டு மொத்தம் 202 பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியதுடன் பூஜ்ஜிய நேரம் ஆனது ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக நீடித்து புதிய சாதனை பதிவாகியுள்ளது.
    - முன்னதாக, 2019 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று, கால நேரம் நீட்டிக்கப் பட்ட பூஜ்ஜிய நேரத்தில் 161 பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் 2024-25

- 2024-25 ஆம் ஆண்டில் பதிவான 9.69% என்ற அளவிலான தமிழ்நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆனது இந்தியாவிலேயே மிக அதிகபட்ச விகிதமாக உள்ளது.
- ஒன்றிய புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சகத்தின் படி வெளியிடப் பட்டத் தரவுகள் இவை ஆகும்.
- இது கடந்த 10 ஆண்டுகளில் மாநிலத்தில் பதிவான மிக அதிகபட்ச விகிதமாகும்.
- நிலையான விலைகளில் (அடிப்படை ஆண்டு: 2011-12), தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) மதிப்பு ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 15,71,368 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2024-25 ஆம் ஆண்டில் 17,23,698 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- இதன் முந்தைய அதிகபட்ச மதிப்பு ஆனது 2017-18 ஆம் ஆண்டில் 8.59% ஆக இருந்தது.

- மிகக் குறைந்த (0.07%) விகிதமானது கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட 2020-21 ஆம் ஆண்டில் தான் பதிவாகியுள்ளது.
- அப்போது மற்ற மாநிலங்கள் எதிர்மறையான முன்னேற்றத்தைப் பதிவு செய்த போது கூட தமிழ்நாடு நேர்மறையான முன்னேற்றத்தைப் பதிவு செய்தது
- உண்மையான வளர்ச்சி விகிதம் என்ற சொல்லானது, பணவீக்கத்தை உள்ளடக்காத விகிதத்தைக் குறிக்கிறது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பெயரளவு வளர்ச்சி விகிதம் ஆனது 14.02% ஆகும் என்ற நிலையில் இது இந்திய மாநிலங்களில் மிக அதிகபட்சமாகும்.
- மாநிலத்தின் இந்த செயல்திறன் ஆனது மூன்றாம் நிலை (சேவைகள்) துறையில் 12.7% வளர்ச்சியாலும், இரண்டாம் நிலை (இரண்டாம் நிலை) துறையில் 9% வளர்ச்சியாலும் உந்தப்பட்டுள்ளது.
- முதன்மைத் துறையின் செயல்திறன் ஆனது மிக மோசமாக 0.15% என்ற விகிதத்தில் உள்ளது.
- முதன்மைத் துறையில் பயிர்கள் மற்றும் கால்நடைத்துறை ஆகியன முக்கியத்துவம் வாய்ந்தத் துறைகளாகும்.
- இந்த மாநிலத்தின் ஒட்டு மொத்த மதிப்புக் கூட்டலில் சேவைத் துறையின் பங்களிப்பு என்பது 53 சதவீதமாக உள்ள நிலையில் இதனைத் தொடர்ந்து உற்பத்தித் துறையின் பங்களிப்பு என்பது 37% என்ற அளவிலும் விவசாயத் துறையின் பங்களிப்பு என்பது 10% என்ற அளவிலும் உள்ளன.
- 2021-22 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு தொடர்ச்சியாக 8% முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது.
- அடுத்து வரும் வருடங்களில் மிக வலுவான ஏற்றுமதியுடன் சேர்ந்து இந்த மாநிலம் 9.7% என்ற அளவில் முன்னேற்றத்தைப் பதிவு செய்தால் 2032/33 ஆம் ஆண்டிற்குள்ளாக ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்த மாநிலம் மாறும்.




# தேசியச் செய்திகள்

## காவல்துறை கைதுகள் குறித்து உச்ச நீதிமன்றம்

- காவல்துறையானது, "அதன் வரம்புகளை மீற முடியாது" என்றும், மேலும் அவர்கள் கைது செய்யும் போது பரிந்துரைக்கப்பட்ட அனைத்துப் விதிமுறைகளையும் கடை

பிடிக்குமாறும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- நமது நாட்டின் சட்டத்தின் கீழ் ஒரு குற்றவாளியும் கூட, தனது தனியுரிமை மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக சில பாதுகாப்பு வசதிகளைப் பெறுவார்.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் காவல்துறையினருக்கு 2023 ஆம் ஆண்டு CrPC/BNSS சட்டத்தின் கீழ், பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு விதிகளை கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஒரு புதிய எச்சரிக்கையைப் பிறப்பித்துள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (பிரிவு 36 BNSS) 41(1)(b)(ii) என்ற ஒரு பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட "சரிபார்ப்புப் பட்டியலை" பின்பற்றுவதும் இதில் அடங்கும்.
- சோம்நாத் மற்றும் மகாராஷ்டிர மாநில அரசு (2023) ஆகியோருக்கு இடையிலான ஒரு வழக்கிலும் வழங்கப் பட்ட உச்ச நீதிமன்றத்தின் முந்தையத் தீர்ப்பானது இதே போன்ற கருத்துக்களைத் தெரிவித்தது.
- அரசியலமைப்பின் 22வது சரத்து ஆனது, அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படும் தனி நபர்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது.




## இந்தியாவில் வன ஆக்கிரமிப்பு குறித்த அறிக்கை

- 25 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் சுமார் 13,000 சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான வனப்பகுதி ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது.
- இந்தப் பகுதியானது டெல்லி, சிக்கிம் மற்றும் கோவாவின் ஒட்டு மொத்தப் புவியியல் பரப்பளவை விட அதிகமாகும்.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, 5,460.9 சதுர கி.மீ வனப்பகுதி பாதிக்கப் பட்டு உள்ள நிலையில், மத்தியப் பிரதேசமானது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் அதிக வன ஆக்கிரமிப்பு கொண்ட மாநிலமாக உள்ளது.
- அசாமில் 3,620.9 சதுர கி.மீ வனப் பகுதி ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது.

- கர்நாடகாவில் மொத்தம் 863.08 சதுர கி.மீ வனப் பகுதி ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் 575.54 சதுர கி.மீ., அருணாச்சலப் பிரதேசத்தில் 534.9 சதுர கி.மீ. வனப் பகுதிகள் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளன.
- தமிழ்நாட்டில் 157.68 சதுர கி.மீ. வனப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
- வனப்பகுதி அல்லது பதிவு செய்யப்பட்ட வனப்பகுதி (RFA) என்பது மரங்களின் பரவல் இல்லா விட்டாலும், அரசாங்கத்தால் மிக அதிகாரப்பூர்வமாக காடாக நியமிக்கப்பட்ட நிலத்தை உள்ளடக்கியது.
- RFA மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:
  - காப்புக் காடுகள் - வேட்டையாடுதல் மற்றும் மேய்ச்சல் போன்ற நடவடிக்கைகள் இங்கு பெரும்பாலும் தடை செய்யப்பட்ட நிலையில், இந்தப் பகுதி முழுமையான பாதுகாப்பைக் கொண்டுள்ளன.
  - பாதுகாக்கப்பட்ட காடுகள் - குறிப்பாக கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படாத சில நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும் மற்றும்
  - வகைப்படுத்தப்படாத காடுகள் – காப்புக் காடுகளாகவும் அல்லது பாதுகாக்கப் பட்ட காடுகளாகவும் வகைப்படுத்தப்படாதவை.




## இந்தியாவில் அமெரிக்க அணு உலைகள்


- சிறிய அணு உலை (SMR) தொழில்நுட்பத்தினை இந்தியாவிற்கு வழங்குவதற்காக என அமெரிக்க எரிசக்தித் துறையானது ஹோல்டெக் இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கு ஒரு முக்கிய ஒழுங்குமுறை ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, அமெரிக்காவின் '10CFR810' என்ற கட்டுப்பாட்டு ஒழுங்கு முறையின் கீழ் உள்ளதோடு 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் இந்த ஒப்புதலானது, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மறு மதிப்பீடு செய்யப்படும்.
- 123 ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் இந்திய-அமெரிக்க பொது அணுசக்தி ஒப்பந்தம் ஆனது 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அப்போதையப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் புஷ் ஆகியோரிடையே கையெழுத்தானது.

- இது இரு நாடுகளுக்கும் இடையே முழுமையான பொது அணுசக்தி ஒத்துழைப்பை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- தற்போது, இந்தியாவில் சுமார் 6780 MWe என்ற நிறுவப்பட்டத் திறனுடன் 22 உலைகள் செயல்பாட்டு நிலையில் உள்ளன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒருங்கிணைக்கப்பட்ட கழுகுக் கணக்கெடுப்பு 2025




- 2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கழுகுக் கணக்கெடுப்பு ஆனது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடக வனத்துறைகளால் மேற்கொள்ளப்பட்டது.

- இந்தக் கணக்கெடுப்பானது தமிழ்நாட்டில் முதுமலை புலிகள் வளங்காப்பகம், சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகம் மற்றும் நெல்லை வனவிலங்கு சரணாலயம்; கேரளாவில் வயநாடு வனவிலங்கு சரணாலயம்; மற்றும் கர்நாடகாவில் பந்திப்பூர் புலிகள் வளங்காப்பகம், பிலிகிரி இரங்கசாமி கோயில் புலிகள் வளங்காப்பகம் மற்றும் நகர்ஹோலே புலிகள் வளங்காப்பகம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாட்டில் மொத்தம் 157 கழுகுகள் பதிவு செய்யப்பட்டன என்ற நிலையில் இது இந்த மாநிலத்தில் கழுகு எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காட்டுகிறது.
- 110 எண்ணிக்கையுடன் வெண்முதுகுக் கழுகுகள் ஆனது மிகவும் மிகுதியாக உள்ள ஒரு இனமாகும்.
- இதைத் தொடர்ந்து நீண்ட அலகு கொண்ட கழுகு (31), செந்தலைக் கழுகு (11) மற்றும் எகிப்தியக் கழுகு (5) ஆகியவை உள்ளன.
- முதுமலை புலிகள் வளங்காப்பகம் ஆனது, பெரும் பயன்பாட்டில் உள்ள 60 கூடுகளைக் கொண்ட கழுகுகளின் மிகவும் குறிப்பிடத்தக்க இனப்பெருக்க எண்ணிக்கையினைக் கொண்டுள்ளதோடு இங்கு 120 கழுகுகள் காணப்படுகின்றன.
- இந்த எண்ணிக்கையில் முக்கியமாக வெண்முதுகுக் கழுகுகள் (108) உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து நீண்ட அலகு கொண்ட கழுகுகள் (10), மற்றும் செந்தலைக் கழுகுகள் (2) உள்ளடங்கியுள்ளன.
- முக்கியமாக, 34 குஞ்சுகளும் இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதோடு இது ஒரு வளமான இனப்பெருக்கப் பகுதியினையும் குறிக்கிறது.

## நைனி ஏரி பிரச்சினை





- நைனிடாலின் முக்கிய சுற்றுலா ஈர்ப்புப் பகுதிகளில் ஒன்றான நைனி ஏரியின் நீர் மட்டம் 4.7 அடியாகப் பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத குறைந்த அளவைக் குறிக்கிறது.
- நைனி ஏரி ஏழு மலைகளால் சூழப்பட்ட நைனிடாலில் உள்ள ஓர் இயற்கை ஏரியாகும்.
- 89 அடி என்ற ஆழமான பகுதியுடன் நைனி ஏரி 12 அடி என்ற அளவீட்டு நிலையினைக் கொண்டுள்ளது.

- உத்தரகாண்ட் ஜல் சன்ஸ்தான் ஆனது, அந்த நகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக என அந்த ஏரியிலிருந்து தினமும் 10 மில்லியன் லிட்டர் தண்ணீரை எடுக்கிறது.


# முக்கிய தினங்கள்

## சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02

- இத்தினமானது 1967 ஆம் ஆண்டு முதல் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனின் பிறந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது.
- அவர் The Princess and the Pea and The Ugly Duckling என்ற புதினத்திற்குப் புகழ் பெற்ற டென்மார்க் நாட்டினைச் சேர்ந்த ஒரு பிரபலமான டேனிஷ் குழந்தைகள் எழுத்தாளர் ஆவார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “The Freedom of Imagination” என்பது ஆகும்.




## இராணுவ மருத்துவப் படைப் பிரிவு உருவாக்க தினம் - ஏப்ரல் 03




- இந்தப் படைப் பிரிவு ஆனது 1764 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதியன்று, இராணுவ மருத்துவப் படை (AMC)


என்று அழைக்கப்பட்டது.

- இந்திய மருத்துவப் படையானது, இந்திய மருத்துவத் துறை மற்றும் இந்திய மருத்துவ மனைப் படைகள் 1943 ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பெரும் படையாக உருவாக்கப் பட்டது.
- இது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி முதல் இராணுவ மருத்துவப் படை (AMC) என்று மறுபெயரிடப்பட்டது.

# இதரச் செய்திகள்

## இராஜராஜ சோழன் காலக் கல்வெட்டுக் கண்டுபிடிப்பு

- மதுரையில் மேலூர் அருகே மேலவலவு எனுமிடத்தில் உள்ள சோமகிரி மலைகளில் இராஜராஜ சோழனைப் பற்றிய ஒரு புதிய கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு ஆனது, கி.பி. 1,000 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- இந்தக் கல்வெட்டு ஆனது பாண்டிய நாடு என்று அழைக்கப்படும் இந்தப் பகுதியில் காணப் படும் ஒரு தனித்துவமான வணக்கவுரையாக இராஜ ராஜ மும்முடிச் சோழர் என்ற மரியாதைக்குரிய பட்டத்துடன் தொடங்குகிறது.




## சமஸ்கிருதம் மற்றும் இந்தி ஆகியவற்றை 3வது மொழிகளாகக் கற்பித்தல்

- கடைசியாகக் கிடைத்த கணக்கெடுப்பின் படி, ஆரம்பக் கல்வி நிலையில் பீகாரில், 99.1% பள்ளிகள் இந்தி மொழியையும், 64% பள்ளிகள் ஆங்கிலத்தையும், 56% பள்ளிகள் சமஸ்கிருதத்தையும் கற்பித்தன என்ற நிலையில் சுமார் 8% பள்ளிகள் மட்டுமே பிற மொழிகளைக் கற்பித்தன.
- இதே போல், உத்தரப் பிரதேசத்தில், ஆரம்பக் கல்வி நிலையில் 94% பள்ளிகள் இந்தி மொழியையும், சுமார் 75.3% பள்ளிகள் ஆங்கிலத்தையும், சுமார் 65.2% பள்ளிகள் சமஸ்கிருதத்தையும் கற்பித்தன என்ற நிலையில் சுமார் 7% பள்ளிகள் மட்டுமே பிற மொழிகளைக் கற்பித்தன.
- உத்தரகாண்ட் மாநிலத்தில், இந்த எண்ணிக்கை 99.5% இந்தி மொழி, 85.5% ஆங்கிலம், 79.4% சமஸ்கிருதம் மற்றும் 2.6% பிற மொழிகள் ஆக உள்ளன.

- குஜராத் மாநிலத்தில், ஆரம்பக் கல்வி நிலையில் 97% பள்ளிகளுக்கு மேல் குஜராத்தி மொழியையும் 20.9% பள்ளிகள் ஆங்கில மொழியையும் கற்பித்தன என்ற நிலையில் சுமார் 64% பள்ளிகள் இந்தி மொழியைக் கற்பித்தன என்பதோடு சுமார் 2.2% பள்ளிகள் மட்டுமே பிற மொழிகளைக் கற்பித்தன.
- கர்நாடகாவில், சுமார் 97.5% பள்ளிகள் கன்னட மொழியையும், 86.2% பள்ளிகள் ஆங்கில மொழியையும், சுமார் 30.4% பள்ளிகள் இந்தி மொழியையும், சுமார் 15% பள்ளிகள் மட்டுமே பிற மொழிகளையும் கற்பிக்கின்றன.
- பஞ்சாப் மாநிலத்தில், சுமார் 79.2% பள்ளிகள் இந்தி மொழியையும், 1 சதவீதத்திற்கும் குறைவான பள்ளிகள் ஆங்கிலம் மற்றும் பஞ்சாபி மொழி தவிர பிற மொழிகளைக் கற்பிக்கின்றன.
- இந்தப் போக்கின் படி, இந்தி மொழி பேசாத மாநிலங்களில், மூன்றாம் மொழி என்பது முன்னுரிமை பெரும்பாலும் இந்தி மொழிக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

Map 3 | State-wise share of schools teaching three languages as of 2023-24




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★